**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திருமதி.R.L.பிரியதர்ஷினி, B.A., B.L.,**

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04 ம் நாள் புதன்கிழமை

**இ.ம.எண்.3/2024 அதன் இ.ம.எண்.2/2024 அதன் அ.வ.எண்.317/2023**

S.பீர்மைதீன் ... மனுதாரர்/பிரதிவாதி

–எதிர்–

H.ஹமீதா பீவி ... எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனு என்முன்பாக 03.02.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.நாகராஜன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.கிருஷ்ணகுமார் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரருக்கு போதிய வாய்ப்பு அளித்தும், வாதுரை செய்யாததால் மனுதாரர் தரப்பு வாதத்தை கேட்டதாக எடுத்துக்கொண்டும், எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தை கேட்டும், மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனு எண்.2/2024 மனுவில் மனுதாரரை பொறுத்து பிறப்பித்த EXPARTEE உத்தரவை ரத்து செய்து மேற்படி மனுவிற்கு மனுதாரர் தரப்பில் எதிர்வுரை தாக்கல் செய்ய வாய்தா அறிவித்து உத்தரவு வேண்டி கட்டளை 9 விதி 7 மற்றும் 151 சி.பி.சி ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்**

மனுதாரர், இ.ம.எண்.2/2024 என்ற மனுவில் எதிர்மனுதாரர் ஆவார்.

எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கில் மனுதாரர் வழக்கறிஞர் மூலமாக நீதிமன்றத்தில் ஆஜராகி மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்/வாதி தனக்கு முற்றிலும் உரிமையும் அனுபவமும் இல்லாத காலிமனை இடத்தை தபசிலுடன் சேர்த்து காண்பித்து நீதிமன்றத்தை ஏமாற்றி மோசடியாக ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பெற்றுவிட வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் பொய்யான சங்கதிகளை அசல் வழக்குரையில் கூறியுள்ளார். மேற்படி அசல் வழக்குரைக்கு மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை பார்த்த பின்னர் மேற்படி மனுதாரர் எனது எதிர்வழக்குரைக்கு ரிப்ளை ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்ய வேண்டும் என கூறி அனுமதி அளிக்க கேட்டு நீதிமன்றத்தில் மேற்படி இ.ம.எண்.2/2024 என்ற மனுவை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவின் நகல் மனுதாரர் வழக்கறிஞருக்கோ, மனுதாரருக்கோ கிடைக்கப் பெறவில்லை. மேலும் மனுதாரருக்கு கண் பார்வை பாதிப்பு ஏற்பட்டு உரிய மருத்துவ சிகிச்சை மேற்கொண்டு மனுதாரருக்கு கண் அறுவைசிகிச்சை செய்து மனுதாரர் மருத்துவர் ஆலோசனைபடி வீட்டில் ஓய்வில் இருந்து வந்ததால் மனுதாரரால் மனுதாரர் வழக்கறிஞரை சந்திக்க முடியாமல் போய்விட்டது. இதன் காரணமாக மேற்படி இ.ம.எண்.2/2024 ன் மனுவின் நகல் மனுதாரருக்கு கிடைக்காமலும் மேற்படி மனுவிற்கு மனுதாரர் தரப்பில் எதிர்வுரை தாக்கல் செய்வதற்கு இயலாமலும் போய்விட்டது. இதன் காரணமாக நீதிமன்றம் 08.11.2024 தேதியில் மனுதாரரை பொறுத்து மேற்படி இடைக்கால மனுவில் EXPARTEE என உத்தரவு பிறப்பித்துள்ளது மேற்படி உத்தரவை ரத்து செய்ய வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது. மனுதாரர் 08.11.2024 தேதியில் நீதிமன்றத்தில் ஆஜராகாமலும், மேற்படி இ.ம.எண்.2/2024 மனுவில் எதிர்வுரை தாக்கல் செய்யாமலும் இருந்தது மனுதாரர் வேண்டுமென்றே செய்த செயல் அல்ல. மனுதாரர் எதிர்வுரை தாக்கல் செய்யாததை நீதிமன்றம் மன்னித்து மேற்படி

இ.ம.எண்.2/2024 மனுவில் மனுதாரரை பொறுத்து பிறப்பித்த EXPARTEE உத்தரவை ரத்து செய்து மேற்படி மனுவிற்கு மனுதாரர் தரப்பில் எதிர்வுரை தாக்கல் செய்வதற்கு வாய்தா அறிவிக்க வேண்டியது அவசியமாக உள்ளது என கட்சி செய்யப்பட்டுள்ளது.

<u>**4)எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்**</u>

எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரரின் மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லக்கூடியதில்லை. மனுதாரரின் மனுவானது ஆரம்ப நிலையிலேயே தள்ளுபடி செய்யக்கூடியதாக இருக்கிறது. இ.ம.எண்.2/2024 மனுவின் நகல் மற்றும் அத்துடன் இணைக்கப்பட்டிருந்த ரிப்ளை ஸ்டேட்மெண்ட் நகல் ஆகியன மனுதார் வழக்கறிஞருக்கு 30.07.2024 ல் சார்வு செய்யப்பட்ட பின்னரே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்னர் 10.09.2024 மேற்படி மனுவானது கோப்பிற்கு எடுக்கப்பட்ட விபரம் மனுதார் வழக்கறிஞருக்கு Notice of Hearing மூலம் தெரிவிக்கப்பட்ட விபரமும் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் தாக்கல் செய்த இ.ம.எண்.2/2024 நகல் எதிர்மனுதாரர் வழக்கறிஞருக்கோ, எதிர்மனுதாரருக்கோ கிடைக்கப்பெறவில்லை என்று கூறுவது துரதிர்ஷடமானது மற்றும் மனசாட்சியற்றது, மேலும் அது மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் தரத்தினை வெளிக்கொணர்வதாக உள்ளது. அதன் பின்னர் எதிருரைக்காக 04.10.2024 ல் வாய்தா போடப்பட்டிருந்த நிலையில், மனுதார் தரப்பில் அன்றைய தினம் எடுத்துரைப்பு ஏதும் இல்லாத நிலையில் வழக்கானது ஒரு மாதம் கழித்து அதாவது 08.11.2024 ல் (NFA) வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றைய தினமும் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாத காரணத்தினால் தான் நீதிமன்றமானது மனுதாரருக்கெதிராக ஒருதலைபட்ச உத்தரவினை பிறப்பித்தது. மேற்படி விபரங்கள் அனைத்தும் மனுவில் மறைக்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரரால் அசல் வழக்கின் தொடர்

நடவடிக்கையை காலம் கடத்த தாக்கல் செய்துள்ள இம்மனுவானது உள்நோக்கம் கொண்டதாகும். மேலும் மனுதாரர் தனக்கு கண் பார்வையில் பாதிப்பு ஏற்பட்டதாகவும், அதற்காக மருத்துவ சிகிச்சை மேற்கொண்டு, கண் அறுவை சிகிச்சை செய்து கொண்டதாக மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை மெய்பிக்க எவ்வித மருத்துவ ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும மனுதாரர் மனுதாரரின் வழக்கறிஞரை எப்போது சந்தித்தார், ஒருதலைபட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்ட விபரம் மனுதாரருக்கு எப்போது தெரிய வந்தது போன்ற எந்த விபரமும் அபிடவிட்டில் சொல்லப்படவில்லை. மேலும் இம்மனுவுடன் மேற்படி இ.ம.எண்.2/2024 க்குரிய எதிருரையும் தாக்கல் செய்யப்படவில்லை. மனு பரிகாரத்தில் ஒருதலைபட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்ட தேதி குறிப்பிடப்படவில்லை. வழக்கு பதிவெண் வருடமும் தவறாக சொல்லப்பட்டுள்ளது. இம்மனுவானது வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் மனுவில் உண்மை இல்லை. மனுதார் சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை நாடவில்லை. இதன் காரணமாகவும் மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யக்கூடியதாக இருக்கிறது என்று கட்சி செய்யப்பட்டுள்ளது.

5) மனு, எதிர் உரை, வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6) அசல் வழக்கானது, பிராது தபசில் சொத்தில் கிழமேலாக கட்டப்பட்டுள்ள கடை கட்டிடங்களை தொடர்ந்து அதன் கிழக்கு பக்கமுள்ள காலி மனையை கம்பிவேலி அமைத்து வாதி வாடகைதாரர் என்ற முறையில் தனித்து அனுபவம் செய்து வருவதை பிரதிவாதியோ, அவரது முகவர்களோ, வேலையாட்களோ இடைஞ்சல் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர், இ.ம.எண்.2/2024 தாக்கல் செய்து அசல் வழக்கின் பதிலுரை தாக்கல் செய்ய அனுமதி கோரியுள்ளார். அந்த மனுவில் போதிய வாய்ப்பளித்தும் மனுதாரர் எதிருரை தாக்கல் செய்யாததால்

மனுதாரருக்கு எதிராக 08.11.2024 அன்று ஒரு தலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.அந்த ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்ய கோரி மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இ.ம.எண்.2/2024 ன் மனு நகல் இந்த மனுவின் மனுதாரரின் வழக்கறிஞருக்கோ, மனுதாரருக்கோ கிடைக்கவில்லை என்று மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி மனுவின் மனு நகல் மனுதாரர் தரப்பு வழக்கறிஞருக்காக கையொப்பமிட்டு பெறப்பட்டுள்ளது தெரிய வருகிறது. எனவே மனுதாரருக்கு மனு நகல் கிடைக்கவில்லை என்று கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல. மேலும் எதிர் மனுதாரர் 10.09.2024 அன்று இ.ம.எண்.2/2024 ன் வாய்தா அறிவிப்பை தாக்கல் செய்துள்ளார் அதிலும் மனுதாரரின் வழக்கறிஞர் மனுவை பார்த்ததாக கூறி கையொப்பம் செய்யப்பட்டுள்ளது.

7) மனுதாரருக்கு கண்பார்வை பாதிப்பு ஏற்பட்டு கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு மனுதாரர் ஓய்வில் இருந்ததால் இ.ம.எண்.2/2024 ன் எதிருரை தாக்கல் செய்ய முடியாமல் போனது என்று கூறியுள்ள காரணம் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது. எனவே மனுதாரருக்கு இ.ம.எண்.2/2024 ல் எதிருரை தாக்கல் செய்ய ஒரு வாய்ப்பு வழங்கும் விதமாக இம்மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் அனுமதிப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**8) முடிவாக,**

எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ.750/-ஐ 10.02.2026 ம் தேதிக்குள் செலுத்தும் பட்சத்திலும் இ.ம.எண்.2/2024 மனுவின் எதிர்உரையை தாக்கல் செய்யும் பட்சத்திலும் இம்மனு அனுமதிக்கப்படும், தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடியாகி விடும். மீண்டும் அழைக்க 10.02.2026.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.02.04 17:45:48 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
திருநெல்வேலி

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் - இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் - இல்லை

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.02.04 17:45:53 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
திருநெல்வேலி

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**இ.ம.எண்.3/2024 அதன்**

**இ.ம.எண்.2/2024 அதன்**

**அ.வ.எண்.317/2023**

சீரான/ வரைவு – உத்தரவு
04.02.2026